## For us, August 15 holds a special significance…

by Narendra Modi 14. August 2009 21:12

நண்பர்களே!

ஆகஸ்ட் மாதம் என்றாலே புரட்சிக்கு வித்தான மாதமாகும்.
ஆகஸ்ட் மாதம் முழுவதும் பண்டிகைகள், விழாக்கள் மற்றும் கேளிக்கைகள்தான்.

ஆனால்…

நம்மைப் பொறுத்தவரை, ஆகஸ்ட் 15 என்பது ஒரு குறிப்பிட்ட முக்கியத்துவத்தை பல காரணங்களுக்காக பெற்றுள்ளது.
பல்லாண்டு வருடங்களாக அடிமைத்தளத்தில் இருந்த நாம், அதை உடைத்தெறிந்து நமது நாட்டிற்கு சுதந்திரம் பெற்ற நாள் இதுவாகும்.

நமது சுதந்திர தினத்தை நாம் ஒவ்வொருவரும் மகிழ்வோடு கொண்டாடும் அனுபவத்தை உணர்கிறோம். இன்று, நீங்களும், நானும் நமது கருத்துகளை சுதந்திரமாக பரிமாறிக் கொள்கிறோம் என்றால் அதற்கு காரணம் நாம் பெற்ற சுதந்திரமாகும்.

நமக்கு சுதந்திரத்தை போராடி பெற்று தந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நாள் இதுவாகும்.

நண்பர்களே, இன்றைய தினம் என் நெஞ்சில் பதிந்த ஒரு அனுபவத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.
சுதந்திரம் பெற்றப்பிறகு, ஸ்ரீநகரில் நாம் நமது மூவர்ண கொடியை உயர்த்தி பறக்க விட்டால் அது, சுதந்திர இந்தியாவின் மரணத்திற்கு சமமாக இருக்கும் என்ற சூழ்நிலையை நமது பகைவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள்.

நல்ல பகல் பொழுதில் ஸ்ரீநகரில் உள்ள லால் சவுக் என்னுமிடத்தில் பிரிவினைவாதிகள் மற்றும் தீவிரவாதிகள் நமது மூவர்ண கொடியை தீயிட்டு கொளுத்தியிருக்கின்றனர்.

நமது மூவர்ணக் கொடியை அவர்களின் காலில் போட்டு மிதித்தும் இருக்கிறார்கள்….இத்தகைய ஒவ்வொரு நிகழ்வையும், பல இலட்சம் இந்தியர்களின் நம்பிக்கை மற்றும் மன உறுதியின் மீது விழுந்த மிகப் பெரும் அடியாக நாம் கொள்ளலாம்.

இத்தகைய பயங்கரமான சூழ்நிலையில், 1991-92-ஆம் ஆண்டு, பாரதீய ஜனதா கட்சியின் அப்போதைய கட்சி தலைவராக இருந்த டாக்டர் முரளி மனோகர் ஜோஷி ஸ்ரீநகரில் உள்ள லால் சவுக்கில் நமது மூவர்ண கொடியை ஏற்ற தீர்மானித்தார்.

Copyright © 2009 NarendraModi.com

இந்த வரலாறு சிறப்பு மிகுந்த இந்த நிகழ்விற்கான தேதி ஜனவரி 26, 1992 என்று தீர்மானிக்கப்பட்டது.
இந்த 'ஏக்தா யாத்ரா' –விற்காக மூவர்ண கொடியை கையில் ஏந்தி, கன்யாகுமரியிலிருந்து நடை பயணமாக நாட்டின் வழியே காஷ்மீரை அடைந்தனர். அதிர்ஷ்டவசமாக, இந்த நிகழ்வை வெற்றிகரமாக முடிக்கும் பொறுப்பை பிஜேபி எனக்கு அளித்திருந்தது. இந்த 'ஏக்தா யாத்ராவின்' போது குறிப்பாக நடந்த ஒரு நிகழ்வு என் மனதை மிகவும் தொட்டது....

எங்களுடைய 'ஏக்தா யாத்ராவிற்காக' நாங்கள் அதற்கென் உருவாக்கப்பட்ட 'ரதத்தில்' தமிழ்நாட்டில் பயணித்துக் கொண்டிருந்தோம்.

அப்போது, வெறும் சாதாரண வேட்டி மட்டும் அணிந்திருந்த ஒரு ஏழை விவசாயி எங்களை நோக்கி வந்தார். ஏதோ ஒரு தீர்மானத்துடன் எங்களுடைய வாகனத்தை நடுவழியில் நிறுத்த முயற்சி செய்தார்.எங்களுடைய 'ரதம்' நிறுத்தப்பட்டவுடன்...

எங்களுடையா ஊர்வலமும் நின்றது.

கண்ணில் பிரகாசமுடன், அவர் எங்களை அணுகி, தன் கையில் இருந்த ரூ.11/- எங்களிடம் கொடுத்தார். எங்கள் முயற்சியை ஆதரிக்கும்விதமாக, ரதத்தை சுற்றி வந்து வணங்கினார். ஏதோ சில வார்த்தைகளை தமிழில் கூறினார். அது என்னவென்பதை தமிழறிந்த எங்களுடன் வந்த தலைவர் விளக்கமளித்தார். அவருடைய வார்த்தைகளின் சாரமாவது, 'என்னால் ஸ்ரீநகரில் உள்ள லால் சவுக்கிற்கு வந்து கொடியேற்ற இயலாது. ஆதலால் என் சார்பாக அந்த கொடியை அங்கு ஏற்றுங்கள்' என்று கூறினார்.

அந்த நாளில், அந்த ஏழை விவசாயின் கண்களில் எதிர்கால இந்தியாவின் வெற்றிகரமான சுதந்திர உணர்வை நான் கண்டேன்.நண்பர்களே, தீவிரவாதிகளின் குண்டு மழைகளுக்கிடையே, ஸ்ரீநகரில் உள்ள லால் சவுக்கில் நான் பெருமிதத்துடன் நமது மூவர்ண கொடியை ஏற்றி பெரு மகிழ்வு கொண்டேன். அந்த ஏழை விவசாயி கண்ட சுதந்திர உணர்வு திருப்தியை , நான் அன்று முழுமையாக உணர்ந்தேன்.

இந்த இனிய சுதந்திர தினத்தில் உங்களுக்கு எனது மனங்கனிந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

உங்களுடைய,



Copyright © 2009 NarendraModi.com